வீழ்ச்சியுற்ற சமுதாயத்தை எழுச்சிபெற செய்வது விஞ்ஞானமே

ஆத்மீகத்தை நம்பிய மனிதன் அறிவுத்திறனை இழந்தான்

கலாசாரத்தின் பெயரால் பிற்போக்குச் சக்திகள் வளர்ந்தன

Phone No 4502 Regd. No. M. 5458

விலை அரை அணா இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (24—4—50) வெளியூர் (25—4—50) [இதழ் 234

விஞ்ஞானத்தின் அவசியத்தை விளக்குகிறார் பண்டித நேரு

"ஆராய்ச்சிக் கூடங்கள் எனப்படுபவை. ஏதோ சில புதுப் பொருள்களைக் கண்டுபிடிக்கும் இடம் மாத்திரம் அன்று. அவை விஞ்ஞான உணர்வூட்டும் இடங்களாகும்— விஞ்ஞானம் மனித வாழ்க்கைக்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை நினைப்பூட்டும் நிலையங்களாகும்."

"இந்தியாவில் மனிதன் ஆத்ம சக்தியைப் பற்றி ஆராய்ந்தானே தவிர, சமுதாய பழக்க வழக்கங்களில் முன்னேற்றம் காணும் சக்தியை, பொறுப்பை இழந்துவிட்டான்"

"கலாச்சாரம் இன்றியமையாது வேண்டப்படுவதேயாயினும், கலாச்சாரம் என்ற பெயரில் பல குறுகிய சக்திகள் தலை தூக்க ஆரம்பித்துவிட்டன. இப்படிப்பட்ட நேரத்தில் விஞ்ஞானம் மக்கள் அறிவைப் பண்படுத்தப்பயன்படவேண்டும்."

தன்பாத் என்னுமிடத்தில் எரிபொருள் ஆராய்ச்சிக்கூடத்தைத் திறந்துவைத்துப்பேசிய போது, பண்டித நேரு மேற்கூறிய கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.

இந்தியன் ஆத்மீகத்தைத் தேடி அலைந்த அளவுக்கு, மனித சமுதாயத்தின் முன்னேற்றத்தைத் தேடி அலைந்தானில்லை என்பதுதான் பண்டிதர் சாட்டும் குற்றச்சாட்டு.

பண்டிதர் பழமையை வெறுக்கிறார், விஞ்ஞானத்தை விரும்புகிறார். அது தேவை என்பதையும் உணருகிறார்! இந்த உணர்ச்சி காரணமாகத் தமது உள்ளத்தைத் திறந்தும் பேசி விட்டார் அவர்.

விஞ்ஞானத்தின் அவசியத்தை உணரும் அதே நேரத்தில். கலாசாரம் என்ற பெயரில் ஒரு சில 'குறுகிய சக்திகள்' விஞ்ஞானத்துக்குக் குறுக்கே நிற்பது கண்டு கவலை கொள்ளுகிறார்.

"கலாசாரம் என்ற உருவிலே பொல்லாத சக்திகள் பல தலை தூக்கிவிட்டன. இந்நேரத்தில் மக்கள் அறிவைப் பண்படுத்த விஞ்ஞானமே தேவை" என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

"கலாசாரம்", விஞ்ஞான வளர்ச்சியைத் தடுக்கவல்ல பொல்லாத சக்தியாகத் தென்படுகிறது பண்டிதருக்கு ஆனால் எப்பொழுது? தான் ஒரு நாட்டின் பிரதமர் என்ற நிலை எய்திய பிறகே அவருக்கு 'மெஞ்ஞானம்' தோன்றியுள்ளது. இதற்கு முன் பண்டிதர் விஞ்ஞானத்தின் அவசியத்தை இத்துணை அளவு அவசியமாகக் கருதினாரில்லை, இதற்கு முன் மதம், கலாசாரம் என்ற சுழலிலே சிக்கிக் கிடந்தவர் தான் இவரும், மார்பிலே பூணூலுடனும், கங்கையிலே புனித நீராடியவர் தான் இவரும். இங்ஙனம் அன்று மூக்கைப் பிடித்துக் கொண்டு மூழ்கி எழுந்த பண்டிதர்தான்,

இன்று முதன் மந்திரியானவுடன் விஞ்ஞானத்துக்கு விளக்கம் தருகிறார்! கலாசாரம் என்பதெல்லாம் விஞ்ஞானத்தின் விரோதி-மக்களை மடமையில் ஆழ்த்தவல்லது என்றெல்லாம் பேசுகிறார்.

பண்டிதரின் பேச்சை-விஞ்ஞான விளக்கத்தை-அஞ்ஞான ஒழிப்புப் பிரசாரத்தைப் பாராட்டுகிறோம், வரவேற்கிறோம். அது மட்டுமல்ல, பாரத நாட்டுப் புராண பண்டிதர்கள், மதஸ்தாபன அதிபர்கள், ஆத்மிகத்தைத் தேடி அலையும் அன்பர்கள், ஆலைகள் அனைத்தும் பேய்கள் என்று, அல்லும் பகலும் பேசும் காந்திய பக்தர்கள், பழமை விரும்பிகள் ஆகியோருக்குப் பண்டிதரின் இந்தக் கருத்துரையை அப்படியே அர்ப்பணம் செய்ய விழைகிறோம், அவர்கள் அனைவரும் இதனைக் கண்டு கருத்துத் தெளிவு பெறட்டும் என்பதற்காக.

பண்டிதர் பேச்சை இத்துணை வலியுறுத்திச் சுட்டிக் காட்டும் அவசியம் என்னையெனின், பழமையின் கொடுமை, அதனால் அறிவுத் துறையில் இந்நாட்டவர் அடைந்த நஷ்டம் ஆகியவற்றை இடைவிடாது சுட்டிக்காட்டி, விஞ்ஞானத்தின் தேவை, அவசியம், அவசரம் முதலியவற்றை மக்களுக்குக் கடந்த இருபத்தைந்து ஆண்டுகட்கு மேலாக எடுத்துரைத்துப் புத்துலகிற்கு வழி காட்டி வரும் இயக்கத்தவராகிய நாமும் இதே கருத்தைத்தான் வெளியிட்டு வருகிறோம். ஆனால் அதற்கு நாம் பெறும்பரிசு நாத்திகப்பட்டம், தேசத்துரோகிகள் என்ற 'புகழ்மாலை'!

ஆத்மீகம் அறிவுவளர்ச்சிக்கு முட்டுக்கட்டை என்றுதான் நாமும் சொல்லுகிறோம். ஆனால் நமது பேச்சு இந்நாட்

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

மே தின விழாவன்று தன்மானப்போர் தொடுத்திடுக!

டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் வேண்டுகோள்

டர்பன், ஏப். 23—

மே 1-ந்தேதி தென்னாப்பிரிக்காவிலுள்ள எல்லா இந்தியர்களும் ஹர்த்தால் அனுஷ்டிக்கவேண்டும் என்கிற கோரிக்கையைடிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் வெளியிட்டிருக்கிறது

அந்த தினம் தொழிலாளர்களுக்கான தினம் என்றும், அத்தினத்தை பொறுக்கி எடுத்தது மிகவும் சரியென்றும் 'இந்தியன் ஒபினியன்' பத்திரிகை எழுதியிருக்கிறது.

நிறத்திமிர் கொள்கை. இந்தியரை வெளியேற்றும் திட்டம், முடக்கல் சட்டம், இவைகளை எதிர்க்கவும் பேச்சுச்சுதந்திரம், சரிசம அந்தஸ்து இவைகளைக் கோரியுமே இந்த ஹர்த்தாலை அனுஷ்டிக்கவேண்டுமென்றும் டிரான்ஸ்வால் இந்திய காங்கிரஸ் கோரியிருக்கிறது.

எல்லாருக்கும் வோட்டுரிமை நியாயமான கூலி, கருப்பர்களுக்கும் நிலம் வைத்துக்கொள்ளும் உரிமை முதலியவைகளை வற்புறுத்தி, அன்று அமைதியான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும்.

இதுபற்றி 'இந்தியன் ஒபினியன்' எழுதுகையில், அன்று இந்தியர் எல்லோரும் கடைகளை மூடிவிட்டு, இந்த பகிஷ்காரத்தில் கலந்துகொள்ள வேண்டும் என வற்புறுத்தியிருக்கிறது.

செயலில் இறங்கவேண்டிய சமயம் வந்துவிட்டது என்பதையும், ஆனால் அஹிம்சா கொள்கையைக் காற்றில் விட்டுவிடக்கூடாதென்றும் அப்பத்திரிகை நினைப்பூட்டியிருக்கிறது. பிரார்த்தனைமூலம் கண்டனத்தை தெரியப்படுத்தும்படி அப்பத்திரிகை யோசனை தெரிவித்திருக்கிறது.

பர்மிங்ஹாம் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம்

லண்டன், ஏப். 23—

பர்மிங்காம் அருகில் உள்ள விமானஉற்பத்தித்தொழிற்சாலையில் மானேஜர்கள், போர்மென்கள், டெக்னீஷியன்கள் முதலியவர்கள் சிலரை வேலையிலிருந்து நீக்கியதை ஆட்சேபித்து ஸ்டிரைக் செய்தனர். ஆனால் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை செய்தனர்.

டமாஸ்கஸ், ஏப். 23—

ஸிரியாவிலிருந்து 60,000 டன் உணவுதான்யம் வரை, ஏற்றுமதி செய்யலாம் என்றும், ஆனால் இவை லடாகியா துறைமுகம் மூலமே அனுப்பப்படவேண்டும் என்றும் ஸிரிய சர்க்கார் தெரிவித்திருக்கிறது.

பட்டப்பகலில் கொலையும் களவும்

(0)

திருவொற்றியூர் அருகில் சம்பவம்

சென்னை, ஏப். 22—

இன்று பிற்பகல் 2-30 மணிக்கு திருவொற்றியூர் பெரியசாலையில் கல்யாணசுந்தரம் அய்யர் என்பவர் யாரோ ஒருவரால்துப்பாக்கியால் சுட்டுத்தள்ளப்பட்டார். உடனே அவர் ராயபுரம்மருத்துவவிடுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டு சற்றுநேரத்திற்கெல்லாம் உயிர் துறந்தார்.

கல்யாணசுந்தரம் அய்யர் கேனன் டங்கர்லி கம்பெனியில் வேலை பார்க்கும் ஒரு கணக்கர். இவர் மேற்படி கம்பெனி வேலைக்காரர்களுக்குக் கூலி வழங்குவதற்காக 3600 ரூபாய்கொண்ட பணமுடிச்சுடன் திருவொற்றியூர் பெரியசாலை வழியே போய்க்கொண்டிருந்தபோது தான் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அய்யர் தனது உதவி கணக்கருடன் சைக்கிளில் சென்று கொண்டிருந்தார். திருவொற்றியூர் பெரியசாலையில் ஏழாவது மைலில் எண்ணூருக்கும்திருவொற்றியூருக்கு மருகில் சென்றுகொண்டிருக்கையில் இருவர் குறுக்கிட்டு அய்யரை வழி மறைத்து மூன்று முறை துப்பாக்கியால் சுட்டுவிட்டு, அவர்கையிலிருந்த பணப் பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடி விட்டனராம்.

உடனே பாலசுப்பிரமணியம் திருவொற்றியூர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று நடந்த விஷயத்தைத் தெரிவித்தார். போலீசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

வடநாட்டு அரிசிக்கு கேரளத்திலும் எதிர்ப்பு!

(0)

அதிகவிலை என்று கண்டனம்

திருவனந்தபுரம், ஏப். 22—

ஐக்கிய மாகாணத்திலிருந்து திருவாங்கூர்—கொச்சி யூனியனுக்கு ஒதுக்கப்பட்டுள்ள அரிசிபயனற்றதும், அதிகவிலையுள்ளதுமாக இருக்கிறதென்று சட்டசபையில், பல அங்கத்தினர்கள் கண்டித்துப் பேசினார்கள். இதுபற்றிய ஒத்திவைப்புத் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

முன்னாள் உணவு மந்திரி தோழர் கே. எம். கோரா பேசுகையில், ஐக்கிய மாகாணத்து அரிசி விலை மிக அதிகமாக இருப்பதோடு உபயோகமற்றதாக இருக்கிறதென்று அறிவித்தார்.

அதிக விலையில் 75 சதவிகிதமாவது மத்திய அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று, பட்டம் தாணுப்பிள்ளை வற்புறுத்தினார்.

ஏற்கெனவே இந்திய அரசாங்கத்தை இதனால் ஏற்படும் செலவை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளதென்று முதல் மந்திரி தோழர் டி. கெ. நாராயணபிள்ளை அறிவித்தார். ஆண்டொன்றுக்கு 3,70000 டன் அரிசி அதிகமாகக் கேரளயூனியனுக்குப் பிடிக்கிறதென்று அவர் கூறினார்.

கைதியை வெளியிட்ட காவலாளிகள்!

7 ஆண்டு சிறைவாசம் பெற்றனர்

ஏலூரு, ஏப். 22—

தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஒரு கைதியைச் சிறைச்சாலையிலிருந்து தப்பித்துக்கொள்ள உதவி செய்தார்களென்று இரண்டு போலீஸ்காரர்களும், மற்ற இருவரும் மசூலிப்பட்டணம் செஷன்ஸ் நீதிபதியால் தண்டிக்கப்பட்டார்கள்.

போலீஸ்காரர்களுக்கு 7 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் மற்ற எதிரிகளுக்கு 5 வருடக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டது.

மாலை மணி

சென்னை 24—4—50 திங்கட்கிழமை

ஊழல் நிறைந்த சர்க்கார்!

"சர்க்கார் உங்களை லஞ்சப் பேய்களுக்குக் கீழ் நிலைக்குக் கொண்டுவிட்டு விடுகிறது; ஆகையால் சர்க்கார் உத்தியோகங்களைப் புறக்கணியுங்கள்."

* * *

வேலைக் கென்று படிக்காதீர்கள்: அதனால் படிப்பின் பண்பே மாறிவிடுகிறது"

* * *

"இந்தியாவின் முன்னேற்றத்துக்காகப் பாடுபடப் பல படித்த இளைஞர்கள் தேவை; நாட்டுக்கு உழைப்பவர்களையே நான் நாடுகிறேன், படித்த காரணத்தால் பதவி தேடுபவர்களையல்ல"

இவைகள் தன்பாத் சுரங்கப் பள்ளி மாணவர்களுக்கு, இந்தியாவின் பிரதம மந்திரி பண்டித நேரு ஆற்றிய அறிவுரையிலிருந்து எடுக்கப்பட்ட பொறுக்குமணிகள்.

இந்தியாவின் பிரதம மந்திரிப் பதவி, ஒரு அரசாங்க வேலை யென்பதை யாரும் மறுக்கமுடியாது; அதைத் தோழர் நேரு வகித்துவருகிறார் என்பதையும் யாரும் தெரிந்து கொள்ளாமல்இருக்கமுடியாது. காந்தியாரின் நேர் வாரிசு என்றும், தேசீயத் தலைவரென்றும் ஓயாமல் பலர் அவர் காதில் விழும்படி கூறுவதால், தான் தலையான அரசாங்கபதவிவகிப்பதையே தோழர் நேரு மறந்துவிட்டார் என்றே நாம் நம்புகிறோம். இல்லாவிட்டால், அரசாங்க உத்தியோகம் வகித்துக்கொண்டே ஊழல்நிறைந்ததென்று கூறுவாரா? "நான் சொல்வதைச் செய்; செய்வதைச் செய்யாதே" என்ற பழமொழியின் வழி படித்த இளைஞர்கள் நிற்கவேண்டுமென்பது அவருடைய எண்ணமாக இருக்கலாம்!

'காந்தீயத்தின் வழிநின்று', கதர்க்குல்லாய் அணிந்து சத்தியசீலர்களாகவே காங்கிரஸ்காரர்கள் இருந்தார்கள்; வெள்ளையன் திடீரென்றுவெளியேற நேரிட்டதால், அரசாங்கத்தில் அவர்கள் புக நேரிட்டது. அதுவரை அவர்கள் நல்லவர்களாகத்தான் இருந்தார்கள்; பாழாய்ப்போன சர்க்கார்அவர்களைக் கெடுத்துவிட்டது! லஞ்சம் வாங்குகிறார்களோ இல்லையோ, அவ்வாறு செய்வதாக மந்திரிகள் மீதே குற்றச்சாட்டு; யாரால்?பழுத்த காங்கிரஸ் தியாகிகளால்! காஷாய உடைபோன்ற கதரணிந்துகொண்டு, சாத்வீக முறைப்படி நின்றுமுதிய காங்கிரஸ்காரர்களையே அரசாங்கம் இவ்வாறு செய்துவிட்டதென்றால், படித்தமாணவர்களைக் கெடுத்துவிடுமென்பதில் சிறிதும் சந்தேகம் கொள்ளாத காரணத்தால் தான், பட்டவர்த்தனமாகக் கூறுகிறார் பண்டிதநேரு!

படித்தவர்கள் பதவி வேட்டையில் இறங்கக் கூடாதென்பது பண்டிதரின் மற்றொரு அறவுரை. 'பாரத்' என்று பெயர் மாற்றியமைக்கப்பட வேண்டுமென்று வட நாட்டார் கிளர்ச்சி செய்யும் இந்தியாவின் செல்வம், பத்து சதவிகிதத்துக்கும் குறைவானவர்களின் கையில் முடங்கிக் கிடக்கிறது. படித்து அதனால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு வாழ்க்கையைப் பக்குவப் படுத்திக்கொள்ள வேண்டுமென்ற எண்ணத்தோடு, ஏழை மாணவர் பலர் பள்ளி செல்லுகின்றனர் படித்தபின் வேலை கிடைக்காமல் அவல நிலை அடைகிறார்கள். அந்நிலையில் நாட்டு முன்னேற்றத்துக்காக அவர்கள் ஒருவித ஊதியம் இல்லாமல் உழைக்கமுடியுமா? அவ்வாறு உழைக்கவில்லையே என்று அவர்களை வெறுத்துத்தள்ளுவது நீதியா, நேர்மையா? பண்டித நேரு பகரும் வகையில் பணக்கார மாணவர்களே நடந்துகொள்ள முடியும். நாட்டின் ரத்தத்தை உறிஞ்சும் அட்டைகள் என உள்ள முதலாளிகளின் செல்வ சிறார்களையே நான் விரும்புகிறேன் என்று, பண்டிதர் கூறுவது பண்பாகுமா?"

"நல்ல பாரம்பரியமும், கலாசாரமும் உள்ள இளைஞர்களையே நான் பெரிதும் விரும்புகிறேன்" என்ற சுடுசொல் மற்றொரு பொறுக்கு மணியாகும். ஏழைக் குடும்பத்தில் பிறந்து, ஏதோ உபகாரச் சம்பளம் பெற்று கல்வி கற்கும் மாணவர்கள் சிறந்தவர்கள் அவர்களே பெரும் பகுதியாக உள்ள ஒரு கூட்டத்தில் நல்ல கலாசாரம் உள்ள இளைஞரையே நான் விரும்புகிறேன் என்று கூறியது எத்தனை இளைஞர் உள்ளங்களைப் புண்படுத்தி இருக்கும்!

நாட்டின் பகுத்தறிவுவாதிகளில் ஒருவர்; அவரைப் போன்று அரசியல் வாதிகள் வெகுசிலரே உள்ளனர் என்று புகழப்படும் தோழர் நேரு அறிவுரை ஆற்ற வேண்டியது அவசியம்தான்; தொழிற்கல்வி பயிலும் மாணவர்கூட்டத்தில் "உத்தியோகத்துக்குப் போகாதீர்கள், நாட்டுக்கு உழைக்க முன் வாருங்கள்" என்று தோழர் நேரு கூறுவதின் பொருளே விளங்கவில்லையே! அவ்வளவு பேரையும் அரசியல் வாதிகள் ஆகும்படி சொல்கிறாரா? எங்கே எதைப் பேச வேண்டும்; யாருக்கு எந்த புத்திமதி யளிக்க வேண்டுமென்பதைத் தோழர் பண்டிதநேரு கூட மறந்து பேசுகிறாரே என்றுதான் நாம் வருந்த வேண்டி இருக்கிறது!

பாலஸ்தீனத்திற்கு திரும்ப அகதிகள் முடிவு

டமாஸ்கஸ், ஏப். 23—

ஸிரியா லெபனனில், பாலஸ்தீனத்திலிருந்து வெளியேறி வந்து தங்கியுள்ள அரபு அகதிகள், தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பிவிட உத்தேசித்திருக்கின்றனர்.

செத்தாலும் தங்கள் சொந்த நாட்டிலேயே சாவது என்ற உறுதியுடன் இவர்கள் திரும்பவிருக்கிறார்கள். இம்முடிவு பாலஸ்தீனக் கமிஷன் தலைவர் தோழர்கள் கிளாடி, டிபாய்ஸாங்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அகதிகள் எவ்வித ஆயுதமுமின்றியே தாய்நாடு திரும்புவார்களாம்.

பாலஸ்தீன கமிஷன் அரபு அகதிகள் விஷயமாக, எதையும் உருப்படியாக செய்யவில்லை என்பதும் கமிஷன் தலைவருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பறக்கும் தட்டுகள் விளம்பர பலூன்களாம்!

பாரிஸ், ஏப் 23—

ஒரு சிகரெட் கம்பெனி கர்ப்படம் ஒன்றை பிரபலப்படுத்துவதற்காக பலூன்களைப் பறக்கவிட்டு, விளம்பரம் செய்தது. அநேக பரிசுகள் .... தட்டுகள் .... ராம்! இதைத்தொடர்ந்து .... ஆராய்ச்சி நிலையத்தில் டெலிபோன் மூலம் தகவல்கள் கேட்கப்பட்டனவாம்.

ஸிரியாவில் கால்நடைகள் அதிகரிப்பு

டமாஸ்கஸ், ஏப் 23—

ஸிரியாவில் கால்நடைகள் மிகவும் அதிகரித்திருப்பதாக இங்கு தயாரிக்கப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து தெரிகிறது. 700000 கால்நடைகள் இப்பொழுது ஸிரியாவில் இருக்கின்றனவாம். நல்ல மழை பெய்து நிறைய புல் வளர்ந்திருப்பதே கால்நடையின் அதிகரிப்புக்குகாரணம் என்று கூறப்படுகிறது. — குளோப்

ஏழையப்பர் கையில் 7 லட்சம்!

வாஷிங்டன், ஏப். 23—

மிஸஸ் லூயி ஹாலமீட் என்பவர் மிகவும் ஏழையென்று கருதி டாக்டர் போவன் என்பவர் 60 வருஷ காலம் இலவசமாகவே அவருக்கு வைத்தியம் செய்து வந்தார்.

மிஸஸ் லூயி இறந்தபின்பு அவர் ரூ. 787000 ஆஸ்தி வைத்துவிட்டுப் போனது தெரிவந்தது.

தான் சிகிச்சை செய்ததற்காக ரூ 67000 தனக்குச் சேரவேண்டும் என்று டாக்டர் கேட்டிருக்கிறார்.

ஸிரியா-சோவியத் வர்த்தக உடன்படிக்கை

டமாஸ்கஸ், ஏப். 23—

ஸிரியாவுக்கும் ரஷ்யாவுக்கும் இடையே வர்த்தக உடன்படிக்கை விஷயமான பேச்சு வார்த்தைகள் சீக்கிரமே ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

பெரிய விவசாய, கைத்தொழில் சம்பந்தப்பட்ட புள்ளி விவரங்கள் இவற்றை ரஷ்ய ஸ்தானிகராலயத்தினருக்கு ஸிரிய அதிகாரிகள் தெரிவித்திருப்பதாகத் தெரிகிறது.

அன்பளிப்பு எங்கே?

★

முறைப்படி காரியம் நடைபெறவேண்டும் என்றீர்கள்!

காரியாலயம் இல்லாமல் ஒரு கட்சி நடத்துவதா என்றீர்கள்!

தலைநகரிலே தங்க ஒரு இடம் இல்லையே என்றீர்கள்!

தலைமைக் காரியாலயம்! உடனே அமைத்தாலொழிய ஒழுங்காக, கழக வேலைகள் நடைபெறாது என்று **அண்ணாவும்** கூறினீர்கள்!

தலைமைநிலையக் கட்டிடம் அமைக்க அன்பளிப்பு வேண்டும் என்று வேண்டுகோள் விடப்பட்டது.

குறைபட்ட தோழர்களே!
வற்புறுத்திய நண்பர்களே!
ஆர்வம்காட்டிய அன்பர்களே!
யோசனை கூறிய தோழர்களே!

உங்கள் அன்பளிப்பை அனுப்பிவிட்டீர்களா?

வீழ்ச்சியுற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப் பெருமக்கள் பலருக்குக் கசப்பாக இருக்கிறது. அதே கசப்பான மருந்தைத்தான் பண்டிதரும் தருகிறார் இன்று! கலாசாரத்தின் பேரால் நடைபெறும் ஊழல்களை நாம் அவ்வப்போது சுட்டிக்காட்டி வருகிறோம். அதே நேரத்தில் தான் நாமத்தின் மகத்துவம், திருநீற்றின் திவ்ய கருத்து என்றெல்லாம் பழைமைச் சின்னங்களுக்கு பரிந்து பேச பக்தர்கள் முன்வருகிறார்கள். கம்பனும், சேக்கிழாரும் கல்லறையைவிட்டுஎழுகின்றனர். பழைமை விரும்பிகள் பகுத்தறி வியக்கத்தாரை வம்புக்கிழுக்கின்றனர்; வாது பலபுரிகின்றனர்.

இங்ஙனம் வம்பு செய்வோரைத்தான் கோணல் புத்தியினர் என்கிறோம்; கலை, கலாசாரம் என்ற பெயர்களில் பகுத்தறிவைப் பாழ்படுத்தும் பிற்போக்குச் சக்திகள் என்கிறோம். பண்டிதரும்இதையே தான் சொல்லுகிறார், விரும்பத்தகாத சக்திகள் என்று.

எனவே தான், பண்டிதரின் இந்தக் கருத்துரையை வரவேற்கிறோம். பண்டிதர் விஞ்ஞானத்தின் அவசியத்தை அறிவுறுத்துவதோடு நின்றுவிடாமல், நாட்டில் விஞ்ஞானம் நடைமுறைக்குப் பயன்படும்படி செய்வதாவது, விஞ்ஞானத்துக்கு மாறுபட்ட கருத்துக்கள் எந்த உருவிலே நடமாடினாலும் அவற்றை சட்டத்தின் துணை கொண்டு மட்டந்தட்டவேண்டும். புதுமைக் கருத்துக்களைப் பரப்பும் இயக்கங்களுக்குப் போதிய ஆதரவு தர முன்வரவேண்டும். ஆதரவு தராவிடினும், அவற்றை அடக்கி ஒடுக்கும் அநீதிகளுக்கேனும் இடம்தராமலிருக்க வேண்டும்.

இதனை ஏன் வலியுறுத்திக் கூறுகின்றோமெனில் இங்கு—திராவிடத்தில் மறுமலர்ச்சி ஏடுகள் அரசியலாரின்அடக்குமுறைகளுக்கு உட்பட்டு அவதிப்படுகின்றன. அதே நேரத்தில் 'ஆத்மீகம்' என்ற பெயரில் அறியாமைப்பணிக்குஆக்கமளிக்கப்பட்டுவருகிறது. திராவிடத்தில் மட்டுமல்லஇந்நிலை, அனைத்திந்தியாவிலும் இதே நிலை தான். இதற்கோர் எடுத்துக்காட்டே அண்மையில் நடைபெற்ற 'கும்பமேளா' கோலாகலம்! கும்பமேளா பலருடைய உயிரைக் குடித்து பலரைப்படுகாயப்படுத்திற்று; ஏன் பலாடையமானத்தையே போக்கிற்று என்றாலும் மிகையாகாது, இப்படிப்பட்ட ஒரு விசித்திர விழாவுக்கு அரசியலாரே ஆதரவு தந்துள்ளனர். 36 லட்சம் ரூபாய் அரசியலார் பங்கில் இவ்விழாவுக்குச் செலவிடப்பட்டதாக அறிகிறோம், அடுத்து, அண்மையில் புதுடில்லியில் இந்துசட்ட திருத்த மசோதாவை எதிர்த்து சாதுக்கள் எனப்படுவோர் செய்த அட்டகாசங்களையும் நாடு அறியும்.

இங்ஙனம், பல விதங்களில் முன்னேற்றத்துக்கு-விஞ்ஞானத்துக்கு முட்டுக்கட்டைகள் இருக்கும்போது பண்டிதநேரு போன்றாரின் கருத்துரைகள் எதற்குப் பயன்படும்? விழலுக்கிறைத்த நீராகவே முடியும், என்பதில் ஐயமில்லை.

விமானத்தில் குண்டு வெடித்தது பற்றி விசாரணை

லண்டன், ஏப். 23—

ஏப்ரல் 13-ந் தேதி பாரிசுக்கு சென்ற 'வைகிங்' விமானத்தில் யார் வெடிகுண்டை வைத்தார்கள் என்பது பற்றி ஸ்காட்லாண்ட் யார்ட் அதிகாரிகள் புலன் விசாரணையைத் தொடர்ந்து நடத்திவருகின்றனர். நார்த்ஹோல்ட் விமான நிலையத்தில் உள்ள விமான அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகியோர்கள் இவர்களால் விசாரிக்கப்பட்டிருக்கின்றனர். மேற்படி விமானத்தில் சென்ற பிரயாணிகளையும் போலீசார் தீவிரமாக கண்காணித்து விசாரணை நடத்தி விசாரித்திருக்கின்றனர்.

எகிப்துக்கு ரஷ்ய கோதுமை

கெய்ரோ, ஏப் 23—

ரஷ்யாவிலிருந்து 100,000 டன் கோதுமையும், அதே அளவுள்ள சர்க்கரையையும் வரவழைக்க எகிப்திய சப்ளை மந்திரிசபையார் தீர்மானித்துள்ளனர். கெய்ரோ விலுள்ள ரஷ்ய ஸ்தானிகராலயத்தினருக்குமிடையே பேச்சு வார்த்தைகள் நடைபெற்று வருவதாக தெரிய வருகிறது.

புத்தமதத்தவராயினும் ஆரியத்துக்கு அடிபணிய வேண்டுமா?

சயாம் மன்னர் திருமணத்தில் பார்ப்பனீயம்!

பாங்காக், ஏப். 23—

இன்னும் சில தினங்களில் ஸயாம் மன்னர் பூமிபானுக்கும், இளவரசி அமாண்டாவுக்கும் திருமணம் நடைபெறவிருக்கிறது. ஸயாமின் அதிகாரபூர்வமான மதம், புத்தமதம்தான் என்றாலும், அரச குலத்தின் வழக்கப்படி பிராம்மண புரோகிதர்களே கலியாணத்தை நடத்தி வைப்பார்களாம்.

இந்த வைபவத்திற்கு சுமார் 100 பேர்களுக்குமேல் அனுமதிக்கப்படமாட்டார்களாம்.

மன்னரின் கையில் புனிதநீர் வார்ப்பது முக்கியமான சடங்குகளில் ஒன்றாம். மன்னரின் 90 வயதான பாட்டிதான் இதைச் செய்துவைப்பாராம்.

சக்ரவர்த்தியின் வைரநகைகள் ஏலம்

ஜூரிச், ஏப், 23—

ரஷ்யாவின் சக்ரவர்த்தியாக இருந்த மூதலாவது பால் என்பவரின் வைரநகைகள், புத்தகங்கள் முதலியவை ஏலத்திற்கு வந்திருக்கின்றன. இவைகளின் மொத்தமதிப்பு ரூ. 130,00,000 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. இவைகள் ஒரு பாங்கின் லாக்கரில் பத்திரமாக இவ்வளவு காலம் பாதுகாக்கப்பட்டு வந்தன. —குனோ.

மேற்கு யூனியன் கடற்படை ஒத்திகை

லண்டன், ஏப். 23—

பிரிட்டன், பிரான்ஸ், டச்சு யுத்தக் கப்பல்களைக் கொண்ட மேற்கு யூனியன் கடற்படையின் ஒத்திகை, மேமாதக் கடைசியில் வட கடலில் நடைபெறும் என்றும் டச்சு அட்மிரல் ஒருவர் தலைமையில் நடைபெறும் என்றும் தெரிகிறது.

2-வது காமன்வெல்த் கிரிக்கெட் கோஷ்டி

இந்தியா வரும்

லண்டன், ஏப். 22—

இந்தியா, பாகிஸ்தான் இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்ய 2-வது காமன்வெல்த் கிரிக்கெட் கோஷ்டி அடுத்த மாரி காலத்தில் விஜயம் செய்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பொழுது வந்த மானேஜர் டக்வொர்த்தே இக்கோஷ்டிக்கும் மானேஜராக இருக்கும்படி கேட்கப்பட்டிருக்கிறாராம்.

அரிசி இறக்குமதிக்கு மலான் சர்க்கார் தடை

டர்பன், ஏப். 23—

அரிசியை தென்னாப்பிரிக்காவில் இறக்குமதி செய்யக்கூடாதென்று மலான் சர்க்கார் விதித்துள்ள தடையை நீக்க வேண்டும் என்று தென்னாப்பிரிக்க இந்தியகாங்கிரஸ், விவசாயமந்திரியிடம் கோரிக்கையை சமர்ப்பித்திருக்கிறது.

இந்த இறக்குமதி தடை கால வரையறை குறிப்பிடப்படாமல் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதாம். தென்னாப்பிரிக்க இந்தியரின் முக்கியமான உணவுப் பொருள் அரிசி தான்.

5 பைசா 'சத்யாக்ரகம்' நீடிக்கிறது!

லண்டன், ஏப். 23—

இந்தியா ஹவுஸ் தான் எழுதிய கடிதத்திற்குப் பதில் போடவில்லை என்றும், அதற்காக அதனிடமிருந்து தனக்கு ஐந்து பென்ஸ் கிடைக்க வேண்டும் என்று கோரி, குருசாந்தன் என்பவர் இந்தியா ஹவுஸ் முன் ஆரம்பித்துள்ள 'சத்யாக்கிரகம்' தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இவர் வெள்ளிக்கிழமை முழுவதும் இந்தியா ஹவுஸ் வாசலிலேயே உட்கார்ந்திருந்தார். மாதக்கணக்கானாலும் சரிதான் இதைக் கைவிடப்போவதில்லை என்று அவர் கூறுகிறார். பிரிட்டிஷ் போலீஸார் இந்த சத்தியாகிரகத்தை லட்சியம் செய்ததாகத் தெரியவில்லை.

பகிஷ்கரிப்பு திட்டம்

கெய்ரோ, ஏப். 23—

யூதப்பொருள்களைப் பகிஷ்கரிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட அரபு லீக் கமிட்டி பகிஷ்காரத்தைத் தீவிரப்படுத்த உத்தேசித்திருக்கிறது.

யூதப் பொருள்கள் இருக்கிறதா என்று, கப்பல்கள் எல்லாம் இனித் தீவிரமாக சோதனை செய்யப்படுமாம். எல்லா அரபு நாடுகளிலும் சாமான் போக்குவரத்து பரிசீலனை கடுமையாக்கப்படுமாம், சந்தேகிக்கப்படுமாம்; சந்தேகிக்கப்படும் தபால்கள்கூட தணிக்கை செய்யப்படுமாம்!

இஸ்ரேல் எல்லையிலும் பொருள்களும் கள்ளத்தனமாக வெளியேறிவிடாதபடி பாதுகாப்பு ஏற்படுத்தப்படுமாம்.

கம்யூனிஸ்டு காரியாலயத்துக்கு பாதுகாப்பு

லண்டன், ஏப். 23—

பிரிட்டனில் கோவெண்ட் கார்டனிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சி காரியாலயம் ஒரு கோட்டை போலவே பந்தோபஸ்துகள் செய்யப்பட்டு வருவது, லண்டன் வாசிகளுக்கிடையே பெரும் ஆச்சரியத்தை விளைவித்திருக்கிறது.

இக்கட்டிடத்தின் முன்பக்கத்திலிருந்த கண்ணாடிகள் அகற்றப்பட்டு, காங்கிரீட்டினால் சுவர்கள் எழுப்பப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு ஜன்னலுக்கும் எஃகாலான மூடிகள் போடப்பட்டிருக்கின்றன.

எதற்காக இவ்வளவு பந்தோபஸ்து செய்யப்படுகிறது என்பது ஒரு புதிராகவே இருக்கிறது.

ஆதிக்க வெறியருக்கு அமைதி தேவையாம்!

லண்டன், ஏப். 23—

அணு சகாப்தத்தினால் அமைதி இழந்த 1000 கணக்கான அமெரிக்கர்கள் மனச் சாந்தியைப்பெற வழியைத் தேடுகின்றனர் என்று ஈவினிங் ஸ்டாண்டர்டு நியூயார்க் நிருபர் கூறுகிறார்.

மாடிசன் நீதியிலுள்ள கத்தோலிக்க மாதா கோவில்களில் ஏராளமான நியூயார்க் யுவர்கள் பிரார்த்தனையில தங்கள் காலத்தைச் செலவிடுவதாக அந்நிருபர் கூறுகிறார். அந்நியில் பத்திரிகைகள், ரேடியோ வாவும் தலைகாட்டக்கூடாதென்று தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

பிரார்த்தனையின் மூலம்தான், அமைதி நிலவ வழி தேட முடியும் என்று இவர்கள் கருதுகிறார்கள்.

இலங்கை இந்தியர் உரிமை பறிக்கப்படுகிறது

மாத்தளை (இலங்கை), ஏப். 21—

அண்மையில் இலங்கை இந்தியர் காங்கிரசில் தோழர் ராஜலிங்கம் பேசுகையில், இந்தியர்களின் ஜீவாதாரமான உரிமையை மறுப்பது தவறு என்ற எண்ணம் இத்தேசத்தில் வளர்ப்பெற்று வருவதை நாளுக்குநாள் நன்றாகத் தெரிகிறதென்றும், இந்தியர்கள் இலங்கைக்குச் செய்திருக்கும் சேவையை மறந்து, அவர்களைக் கீழ்நாத்தில் வைப்பது சரியல்லவென்ற உணர்ச்சியும் வலுவடைந்துவருகிறதென்றும் குறிப்பிட்டார். சென்ற வருட மாநாட்டில் இங்கிருக்கும் இந்தியர், பாகிஸ்தானிகள் பிரஜா உரிமை சம்பந்தமாக இலங்கை இந்தியர், செய்த சட்டத்தைப் பகிஷ்கரிக்கும்படி இலங்கைவாழ் இந்தியரைக் கேட்டுக்கொண்டு தீர்மானஞ் செய்ததையும், அந்தக் கட்டளையை இலங்கை இந்தியர் உறுதியுடனிருந்து நிறைவேற்றியதையும் தோழர் ராஜலிங்கம் பாராட்டிவிட்டு

மேலும் கூறியதாவது:—

"இலங்கை பார்லிமெண்டு நிறைவேற்றிய அக்கிரமச் சட்டங்களை இந்தியர் ஒரு முகமாக எதிர்த்திருக்கிறார்கள். பதிவுசெய்துகொள்ளும்படி செய்ய இலங்கை சர்க்கார் செய்த முயற்சிகளெல்லாம் தோல்வியடைந்தன. பிரஜா உரிமைக்கு இலங்கை சர்க்கார் விதித்துள்ள நிபந்தனைகள் கடுமையானவை. பதிவு செய்து கொள்வதற்கு கூறப்பட்டிருக்கும் முறை இலங்கைவாழ் இந்தியர் அனுஷ்டிக்க முடியாதபடி அவ்வளவு மோசமானவை. பதிவின் பேரில் பிரஜா உரிமை பெற்றவர்களுக்கும், வம்ச வழியில் உரிமை பெற்றவர்களுக்கும் சம அந்தஸ்து வேண்டுமென்பதை வற்புறுத்துகிறேன்.

"இலங்கைவாழ் இந்தியருக்குப் பெருந் தொல்லைகளை விளைவிக்கும் ஏற்பாடும் செய்யப்பட்டிருக்கிறது. குடியேற்ற சட்டப்படி குடியிருப்புத் தகுதியைப் பெற்றவர்கள் கூட இலங்கைக்குத் தாராளமாக வர முடியாதபடி செய்யப்பட்டிருக்கிறது. பிரதம மந்திரிசேனநாயகா எவ்வித கஷ்டமுமிருக்காதென்று உறுதி கூறினர். ஆனால் தாராளமாக இலங்கைக்கு வரமுடியாதபடி சில விநோதமான தந்திரங்களும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. 10 சத விகிதத்தினர் கூட மண்டபத்தில் அனுமதிச் சீட்டு பெற்று இங்கு வருவது மாகஷ்டமாக இருக்கிறது.

"சோல்பரி கமிஷன்" கருதியதற்கு மாறாக இந்தியர்கள் எல்லோரையுமே விரட்டிவிட இப்பொழுது இலங்கைசர்க்கார் முயற்சி செய்து வருகின்றனர். இந்தியரை விரட்டிவிடும் வகையிலேயே அந்நிய செலாவணி மாற்ற கட்டுப்பாடு விதிகள் கையாளப்படுகின்றன. தங்கள் குடும்பத்தினர்க்கு பணம் அனுப்ப மாதா மாதம் பர்மிட் பெறுவதற்கு விதிக்கப்பட்டிருக்கும் நிபந்தனைகள் அக்கிரமமானவை. இதனால் வேறு ஜீவனத்துக்கு வழியில்லாமல் தங்கள் குடும்பங்களை விட்டு வந்திருக்கும் தொழிலாளர்களுக்கு அதிக கஷ்டமாகிறது. இத்தகைய முறைகள் பெரும்பாலும் சொல்லத்தரமன்று. தர்மிட்டிஷ் நாட்டில் வெள்ளைக்காரர்களுக்கு அவர்கள் இஷ்டப்படி பெல்லாம் அனுமதித்திருக்கும் போது, இந்தியருக்கு மாத்திரம் ஏன் கஷ்டம் விளைவிக்கப்படுகிறது. புத்தர் நாடு என்று சொல்லிக் கொள்ளும் இலங்கை, பிரஜைகளின் ஒரு பகுதியினருக்குத் துன்பம் விளைவிப்பது புத்தர் உபதேசித்த தர்மங்களுக்கும் பொருந்துமா என்பதை யோசிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்."

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

25-4-50

நஞ்சைத்தலையூர் :—சி. பி சிற்றரசு.

27-4-50

மங்கநல்லூர் :—சி. பி. சிற்றரசு, ஏ. வி. பி. ஆசைத்தம்பி வை. மாணிக்கம்

ரெட்ஹில்ஸ்:-இரா. நெடுஞ்செழியன், காஞ்சி. கலியாணசுந்தரம்

1-5-50

மே விழாக் கூட்டங்கள்

சென்னை :—சி. என். அண்ணாத்துரை

மதுரை :—அ. சித்தையன்

கோவை :—இரா நெடுஞ்செழியன்

சமாதானத்திற்கு ரஷியா தான் உலை வைக்கிறதாம்

(ந)

ப்ரீஸ்ட்லி கூற்று!

லண்டன், ஏப். 23—

ஸ்டாக்ஹோமில்நடந்தசமாதான கூட்டத்தில் ப்ரீஸ்ட்லி போன்றவர்கள் கலந்துகொள்ளாததது பற்றிக் குறை கூறி, ரஷிய ஆசிரியர் பெலேயாஎக்யன்பாக் செய்துள்ள புகாருக்கு இங்கிலீஷ் முற்போக்கு ஆசிரியர், ப்ரீஸ்ட்லி நியூ ஸ்டேட்ஸ்மென் மூலமாக பதில் அளித்திருக்கிறார்.

அவர் எழுதியிருப்பதாவது:—

யூனெஸ்கோவை ஆதரித்து இரண்டு ஆண்டு நான் பாடுபட்டிருக்கிறேன். ரஷியர்களாகிய நீங்கள் அத்தகைய ஸ்தாபனங்களில் சேராமல் பகிஷ்கரித்துவருகிறீர்கள்.இரு சர்வதேசமாநாட்டில்நான் தலைமை வகித்தேன். எவ்வளவோ அழைப்புகள் அனுப்பியும் நீங்கள் அவைகளில கலந்துகொள்ள முன்வரவில்லை, நீங்கள் எழுதுவதெல்லாம் பொய் பிரசாரமாகவே. இருக்கிறது ஆனால் எங்களைப் போன்றவர்கள்எழுதுவதெல்லாம்அமைதியாக வாழ்க்கை நடத்துபவர்களுக்காகவே இதிலிருந்து உலக அமைதிக்கு உலை வைப்பவர்கள் யார் என்பதை நீங்களே அறிந்துகொள்ளலாம்

கோடீஸ்வரர்களுக்கு கடும் தண்டனை

தென் ஆப்பிரிக்க வழக்கில் தீர்ப்பு

மில்னே, எர்லீ என்ற இரு கோடீஸ்வரர்களுக்குத் தலா 10 ஆண்டு சிறைத் தண்டனையும், 80 000 பவுன் அபராதமும் விதிக்கப்பட்டன. அபராதம் செலுத்தத் தவறினால், மேலும் 3½ ஆண்டு சிறைவாசத்தை அவர்கள் அனுபவிக்க வேண்டும்.

ஒரு தங்கச் சுரங்க கம்பெனியின் டைரக்டர்களாக இருந்த இவர்கள் திருடு மோசடிகள் செய்ததாகவும், கம்பெனிச் சட்டத்தை மீறியதாகவும் நீதிபதி தீர்ப்பளித்தார்.

தென் ஆப்பிரிக்காவில், இதற்கு முன் எவருக்கும் இவ்வளவு கடுமையான தண்டனை விதிக்கப்பட்டதில்லையாம்.

காசநோய் குணப்படுத்த மருந்து

நியூயார்க், ஏப் 23—

க்ஷயரோகத்தைக் குணப்படுத்த ஸ்டிரெப்டோமிஸின் போன்ற மற்ற மருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டுவிட்டன வென்று தெரிய வருகிறது.

நோபின் பரிசு பெற்ற ஜெர்மானியர் கெஹார்ட்டோமாக் என்பவர் கண்டுபிடித்துள்ள தியோசிமைக்கார்பாஸோன்ஸ் (டி. எஸ். ஸி) என்பதும் இதில் ஒன்றும்.

இம்மருந்து ஜெர்மானியில் உபயோகிக்கப்பட்டு வெற்றி காணப்பட்டிருப்பதாகக்கூறப்படுகிறது

இம்மருந்தை க்ஷய வியாதி பீடித்துள்ள எலிகள் உடம்பில் பிரயோகிக்கப்பட்டதாம். இம்மருந்து கொடுக்காமல் இருந்தால், 20 நாட்களில் அந்த எலிகள் இறந்திருக்கும் என்றும் இம்மருந்து பிரயோகத்தினால் இன்னும் 30 நாட்கள் அதிகமாக அந்த எலிகள் உயிர் வாழ முடிந்ததாம்.

இன்னும் இம்மருந்துகள் பொது உபயோகத்திற்கு வரவில்லை.

மலேயாவில் ஒரு தமிழர் கொலை!

வாரக்டாகோ எஸ்டேட்டில் மலேயா கலகக்காரர்கள் தாக்குதல் நடத்தியபோது பொக்கிலுள்ள டாபா பிரதேசத்தில் ஒரு தென்னிந்திய தொழிலாளியை (தமிழ) கொலை செய்தனர்.

அந்த எஸ்டேட் கூலியாட்களின் விடுதியைச் சூழ்ந்துகொண்டு சண்டக்டர் பங்களாவைத் தீயிட்டு எரித்தனர்.

செரி கெம்பிளான் என்ற இடத்தில் சொம்பான் பிரதேசத்தில் ஒரு சீனர், கை, கால்கள் கட்டப்பட்டு கோரமாக சுட்டுக்கொல்லப்பட்டார். அவரைக் கட்டி நிறுத்தி வைத்துவிட்டு, பின்னாலிருந்து சுட்டுக் கொன்றதாக கூறப்படுகிறது.

லண்டன் துறைமுக தொழிலாளர் ஸ்டிரைக்

லண்டன், ஏப். 21—

லண்டன் துறைமுகத் தொழிலாளர் ஸ்டிரைக் செய்திருப்பது சம்பந்தமாகப் பிரிட்டிஷ் மந்திரி சபை இன்று ஆலோசனை நடத்தியது

கழக நடவடிக்கைகள்

சேலம்பொன்னம்மாப்பேட்டை-தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 12—4—50 இரவு கழகக் கட்டிடத்தில், தோழர் பி. கே. மன்னூர் தலைமையில் கூடியது. அதுபோது அஞ்சாநெஞ்சன் அழகிரியின் நினைவு நாளைப்பற்றியும், கழகத் திறப்பு விழாவின் அவசியத்தைப் பற்றியும் தோழர்கள் என். எஸ். ராசு, வி. டி. பெருமாள், ஏ. எஸ். சாமு ஆகியோர் பேசினர்.

கழகத் திறப்பு விழாவை அதி விமரிசையாகக் கொண்டாடவேண்டுமென தீர்மானிக்கப்பட்டது.

* * *

தேவதானம்:— 12—4—50ல் நடந்த தி. மு. க. செயற்குழுக் கூட்டத்தில், சில அனுதாபத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. கழகத்தின் நிதிக்காக மாதம் 1க்கு சந்தா 4 அணா என முடிவு செய்யப்பட்டது. தோழர்கள் ஈ.வே அ. வள்ளிமுத்து, எம். எஸ். ராமசாமி ஆகிய இருவரையும் அழைத்து கழகப் பொதுக்கூட்டம் நடத்த வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

* * *

சென்னிமலை:—தி. மு. க. சார்பில் 14—4—50 அன்று தோழர்கள் பி. வி. சித்ரா; எஸ். அப்பாவு ஆகியோரின் சொற்பொழிவு நடைபெற்றது, 'தற்கால நிலையும் திராவிட முன்னேற்றக் கழகமும்' என்பதைப்பற்றி மிக விரிவாகப் பேசினர்கள். முடிவாக நன்றிகூறப் பட்டபின் கூட்டம் இனிது கலைந்தது.

* * *

கோவை செல்வபுரம்:—தி. மு. க. வின் செயற்குழுக் கூட்டம் தோழர் ஆர். ஆதிசிவம் அவர்கள் தலைமையில் 17—4—50 திங்கள் இரவு கூடி கீழ்க்காணும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

மத்திய திராவிட முன்னேற்றக் கழகக் கட்டிட நிதிக்காக கழகத்தின் சார்பில் ரூபாய் 10 அனுப்புவதெனத் தீர்மானிக்கிறது.

மே திங்கள் 21-ல் இவ்வூரில் ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதெனவும், அக்கூட்டத்திற்கு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களை அழைப்பதெனவும் இக்குழு தீர்மானிக்கிறது. இதற்கு ஆவன செய்து தருமாறு கோவை மாவட்ட தி. மு. க. செயற்குழுவை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

* * *

மாயவரம்:—9—4—50 இரவு கழகக் கட்டிடத்தில் தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது நிறைவேறிய தீர்மானங்கள்:— இம்மாதத்தில் தஞ்சை மாவட்ட சத்துப்பிரமாணம் செய்விருக்கும், பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரை அவர்களைக்கொண்டு முதலாவது பொதுக்கூட்டமாக இவ்வூரில் அமைத்துக்கொடுக்க மாவட்ட கமிட்டிச் செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அவர்களை இச்செயற்குழு கேட்டுக்கொள்கிறது. தோழர்கள் வேல்முருகன், ஜே. சிகாமணி, இவர்கள் செயற்குழுவிலிருந்து விலக்கப்பட்டும், தோழர்கள் ஏ. சாமிநாதன், என். கிட்டப்பா, வி. ஏ. சபஹான் ஆகியோரின் விலகுதல் கடிதமும் ஒப்புக்கொள்ளப்பட்டது. தோழர் கே. இராசகோபால் அவர்களைச் செயற்குழுவில் சேர்த்துக்கொள்ளப்பட்டது.

* * *

மதுரை:—இவ்வூர் தி. மு. கழகத்தின் துவக்கவிழா 16—4—50 ஞாயிற்றுக்கிழமை மாலை தோழர் இரா. அழகர்சாமி அவர்கள் தலைமையில், அண்ணா பூங்காவனத்தில் (ஜான்ஸி அரசி பூங்கா) நடைபெற்றது. அதுபோது பல கழகத் தோழர்கள் மிகக் கழகத்தின் அவசியத்தைப்பற்றி பேசினர்கள். பின் கீழ்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—என். ஜெயப்பிரகாசன், துணைச் செயலாளர்—சமூகதாசன், பொருளாளர்—க. முருகன், விளம்பர உறுப்பினர்கள்—முருகேசன், இராவணன். பின்னர் எனைய செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

* * *

மேலப்பழூர்:—தி. மு. கழகச் செயற்குழுக்கூட்டம் 10—4—50 மாலை கழகக் கட்டிடத்தில் தோழர் கே. நாகராசன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர் டி. கே. சீனிவாசனை அழைத்து ஒரு பொதுக்கூட்டம் நடத்துவதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

தூத்துக்குடி மேலூர்:—தோழர் சி. என். அண்ணாத்துரை தி. மு. க. செயற்குழுக் கூட்டம் 16 4-50 அன்று மாலை கழகக் கட்டிடத்தில் தோழர் தி. வணப்பெருமாள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அதுபோது சில தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, தோழர் டி. கே. சீனிவாசன் அவர்களை மே மாத முடிவுக்குள் அழைத்து பொதுக் கூட்டம் நடத்துவதென ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

* * *

கோவை:—16 4 50 காலை நகர தி. மு. கழகக் கட்டிடத்தில் பொதுவிதிக் கூட்டம் கூடியது. அதுபோது 'திராவிடர் பாராளுமன்றம்' அமைக்கப்பட்டது. வடநாட்டு கவர்னராக வந்த தோழர் எ. எஸ். நடராசன் முன்னிலையில் பாராளும் மன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் சின்னதுரையும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தோழர் எஸ். எ. இராசமாணிக்கமும் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர். பின்னர் பிரதம மந்திரியாகத் தோழர் பு. ஜெமால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் துணைத்தலைவர் இராசமாணிக்கம் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார். பின்னர் கீழ்க்கண்ட தோழர்கள் மந்திரிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்கள் பிரதம மந்திரி தோழர் பு. ஜெமால் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்: தோழர்கள் ஆறுமுகம் கல்வி மந்திரி, எ. முருகன் நிதி மந்திரி, ராசமாணிக்கம் சுகாதார மந்திரி, சி. டி. தண்டபாணி உணவு மந்திரி. இராஜேசவான் தொழில் மந்திரி, கிருட்ணராசு சட்ட மந்திரி, இளங்கோ வெளிநாட்டு மந்திரி.

எதிர்கட்சித் தலைவர்கள்: (மெதடிஸ்ட்ஸ்) தோழர்கள் ஏ. எஸ். நடராசன், சிவசாமி.

பின்னர் பாராளுமன்ற உறுப்பினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் எ. வி. பி. ஆசைத்தம்பி பாராளுமன்றம் நடைபெற வேண்டிய முறைகளைப்பற்றி பேசியபின் மன்றம் இனிது கலைந்தது.

* * *

கோபி:—நகர திராவிட முன்னேற்ற வாலிபர் கழகக் கமிட்டிக் கூட்டம் 16-4-50 அன்று தோழர் ஜி. ஆர். பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது கீழ்வரும் தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறியது.

1. சுயமரியாதை இயக்கத்திற்கும், திராவிட இயக்கத்திற்கும் ஓயாது உழைத்த கோபி ராமு அவர்கள் இறந்துவிட்டமைக்கு இக்கூட்டம் அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

3. தலைமைக் காரியாலயக்கட்டிட நிதிக்கு ரூபாய் 10 நன்கொடை அளிப்பது.

4. மே மாதம் கழகப்பேச்சாளர்களை வரவழைத்து பொதுக்கூட்டம் நடத்துவதென தீர்மானிக்கப்பட்டது.

சலகண்டபுரம்:—16—4—50 அன்று தி. மு. கழகத்தில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்திற்கு தோழர்கள் ர. கந்தசாமி, மா. ஆறுமுகம் அவர்களைக் குறைபேறுமொழிந்தும் வழி மொழிந்தும் தோழர் அழ அண்ணாமலை அவர்கள் தலைமை வகித்தார். அதுபோது கொண்டுவரப்பட்ட தீர்மானங்களைப் பற்றி தோழர் ப. கண்ணன் விளக்கிப் பேசியபின், கீழ் கண்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

தி. மு. க. தலைமைக் காரியாலய கட்டிட நிதிக்காக கழகச் சார்பில் நிதி வசூலித்து அனுப்புவது. நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

எழாயிரம் பண்ணை:—16-4-50 அன்று தி. மு. க. சார்பில் தோழர் வி. ராமசாமி தலைமையில் இரவு கூட்டம் ஆரம்பமாயிற்று. தோழர் எம். என். ராமசாமி அவர்கள் ஆட்சியாளரின் அடக்குமுறை பற்றியும், ...வின் மூடநம்பிக்கைகள் குறித்தும், திராவிட நாடு பிரிவினை பற்றியும் சொற்பொழிவாற்றினர். முடிவாக தலைவரவர்கள் சேலம் சிறைச் சம்பவம் குறித்துப் பேசியபின்பு தோழர் எஸ். பழனியப்பன் பி. ஏ. நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

* * *

மேலக்கோட்டையூர், சின்னையாபுரம்:—11—4—50ல் தோழர் எம். மண்டலம் அவர்கள் தலைமையில் தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது செயற்குழு கீழ்க்கண்டவாறு மாற்றியமைக்கப்பட்டது. செயலாளர் எஸ். தங்கச்சாமி, துணைச் செயலாளர் எஸ். வி. பாண்டியன் பொருள் உறுப்பினர் எஸ். எம். செந்தூரான் விளம்பர உறுப்பினர் பொ. சண்முகசுந்தரம் ஏனைய செயற்குழுவினர் பி. ஆர். நல்லமுத்து கே. மணி சி. சங்கரலிங்கம் எம்மண்டலம் எஸ். இராசன், இரா. மாரியப்பன், சி. கிருஷ்ணன் மு. நடராஜன் ல. இராமச்சந்திரன் மா. சிங்கத்துரை. ச. தங்கச்சாமி, அ. சங்கரலிங்கம் தோழர் எஸ். வி. பாண்டியன் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

* * *

ஜமீன் ஆலமரத்துப்பட்டி:— 29-3-50ல் நடைபெற ஏற்பாடாகி ஒத்திவைக்கப்பட்ட கூட்டத்தின் வரவு செலவு:—நன்கொடை வரவு ரூ. 15-0-0 செயலாளர் எ. சின்னசாமி வசம் ரொக்கம் ரூ. 21-12-0 தோழர் சி. பி. சிற்றரசு வருகைக்கு அனுப்பியது 25-0-0 விளம்பரச் செலவு ரூ. 11-12-0 29—3—50.ல் கூட்டம் வேண்டாமென்று பிரிதொரு சமயம் கூட்டலாமென்றும் கேட்டுக்கொண்டு கிராமப் பெரியோர் பொறுத்த நஷ்டஈடு ரூ. 45-0-0 செயலாளரிடம் வாங்கியபடன் தொகை ரூ. 21—12—0 கூட்டம் இல்லையென்று மறுப்புக்கொடுத்ததற்கு சினிமா ஸ்லைடு செலவு 1-5-0 கழக உறுப்பினர் ரசீது 32 க்கு ரூ. 8-0-0 மொத்த வரவு ரூ. 89—12—0 மொத்த செலவு ரூ. 59—13—0 மீதி இருப்பு 29-15-0 (ரூபாய் இருபத்தி ஒன்பதும் அணா பதினைந்து மட்டும்)

* * *

கன்னிக்கோட்டை:—18-4-50 அன்று மாலை தோழர் நாராயணசாமி அவர்கள் மாளிகையில் வே. கந்தசாமி அவர்கள் தலைமையில், தி. மு. க. செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தோழர் அண்ணாத்துரை அவர்களின் அறிக்கைப்படி ரூபாய் பத்து தலைமைக் காரியாலய கட்டிட செலவுக்கு அன்பளிப்பாக அனுப்புவது. கலைவாணர் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் இந்நகர் பொருட்காட்சி சாலைக்கு வரும்பொழுது, கழகச் சார்பாக வரவேற்பிதழ் வாசித்துக் கொடுப்பது. பின்பு செயலாளர் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

இருக்கிற உரிமையே போதுமாம்

—

அமெரிக்க மாதர்கள் கருத்து

நியூயார்க், ஏப். 23—

யுனைடெட் ஸ்டேட்ஸ் காங்கிரஸ் முன்பு பெண்களுக்கும் ஆண்களுடன் சரிசமமான அந்தஸ்து உரிமைகள் தரப்பட வேண்டும் என்று கோரும் மசோதா வந்திருக்கிறது. அமெரிக்க மாதர்கள் ஆட்சேபித்து தங்களுக்குள்ள உரிமைகள் போதும், ஆண்களுடன் சரிநிகர் அந்தஸ்து வேண்டாம் என்று கூற ஆரம்பித்திருக்கின்றனர்.

இப்பொழுதுள்ள உரிமைகளைக்கொண்டே ஆண்களைத் தாங்கள் சொல்கிறபடி நடக்கச் செய்யலாம் என்று அவர்கள் பட்டவர்த்தனமாக கூறுகின்றனர்.

பி. பி. ஸி. ஒலிபரப்புக்கு மலான் சர்க்கார் தடை

பி. பி. ஸி. தன் ஒலி பரப்புகளில் திறநாட்டினின் அரசியல் விஷயங்களைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க தயார் இல்லை என்று தெரிவித்ததின் பேரில், தென்னாப்பிரிக்க ரேடியோவில் ஜூலை 1-ந்தேதி முதற்கொண்டு பி. பி. ஸி செய்திகள் அஞ்சல் செய்யப்படக்கூடாது என்று தென்னாப்பிரிக்கா பிரதமர் டாக்டர் மலன் தடையுத்திரவு பிறப்பித்திருக்கிறார்.

ஸ்மட்ஸ் கோஷ்டியின் லைசென்ஸ் கொடா இயக்கம்

ஜெனரல் ஸ்மட்ஸ் போன்றவர்களின் பிரசங்கங்களை பி. பி. ஸி. ஒலிபரப்பியது முதற் கொண்டே மலான் கோஷ்டியினருக்கு பி பி ஸி மீது கோபம் ஏற்பட்டிருந்தது.

இத்தடையுத்திரவை ஸ்மட்ஸ் கோஷ்டியினர் வெகு தீவிரமாக கண்டிக்கின்றனர். அவர்கள் ரேடியோக்களுக்கு லைசென்ஸ் வாங்குவதில்லை என்ற ஒரு இயக்கத்தை ஆரம்பித்திருக்கின்றனர். —ரூடர்

உலகப் புகைப்பட கண்காட்சி

—

புதுடில்லியில் அடுத்தமாதம் நடைபெறும்

புதுடில்லி, ஏப். 23—

சர்வதேச புகைப்படக் கண்காட்சி ஒன்று அடுத்த மாத மத்தியில் புதுடில்லியில் நடைபெறவிருக்கிறதெனத் தெரிகிறது.

புதுடில்லி காமிரா சொஸைட்டி உத்தர பிரதேச அமெச்சூர் போட்டோகிராபிக் சங்கம் இவைகளின் ஆதரவில் இது நடைபெற விருக்கிறது.

ஏற்கனவேயே இதாலி, பெல்ஜியம், யுனைடெட்ஸ்டேட்ஸ், ஸ்வீடன், கனடா, ஹங்கேரி, ஸ்விடன், ஸ்விட்ஸர் லாந்து, ஆஸ்திரேலியா, மொராக்கோ, நியூஜிலாந்து முதலிய இடங்களிலிருந்து சுமார் 100 போட்டோக்களுக்குமேல் கண்காட்சியில் வைப்பதற்கு வந்திருக்கின்றன.

இந்தியாவின் 15 போட்டோக்கள் இக் கண்காட்சியில் இடம் பெறும் எனத்தெரிகிறது.

போலீசாருடன் சண்டையில் 11 சீக்கியர்கள் மாண்டனர்

அமிர்தசரஸ், ஏப் 20—

இங்கிருந்து 30 மைலுக்கு அப்பாலுள்ள ராதான் என்ற கிராமத்தில் போலீசாருக்கும் அகாலி சீக்கியர்களுக்கும் நடந்த கலவரத்தில் 11 சீக்கியர்கள் மாண்டனர். பெரிய போலீஸ் அதிகாரிகளும் பெரும் போலீஸ் படையும் ஸ்தலத்திலேயே இன்னும் இருந்துவருகிறது. சம்பவத்தைப் பற்றிய முழு விவரமும் இன்னும் கிடைக்கவில்லை.

2250 வருஷத்திற்கு முன் புதைக்கப்பட்ட சவம்

கெய்ரோ, ஏப். 20—

2250 வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த ராணி தாஹவுத்தின் சவம் அழிவுறாமல் கீழ் எகிப்தில் அத்ரிபா என்ற கிராமத்தில் கண்டுபிடிக்கப்பட்டது. கல்ப தைலம் பூசி மன்னர்கள், ராணிகள் இவர்களின் சவங்களை அழிவுறாமல் வைப்பது எகிப்தில் வழக்கம். அவ்வித பல சவங்களை இன்றைக்கும் எகிப்தின் தலைநகரில் ஒரு பொருட்காட்சியில் காணலாம். பொன்னும் விலையுயர்ந்த ஆபரணங்களும் அந்த சவம் வைக்கப்பட்ட பெட்டி மேலும் அப்பெட்டியிலுள்ள கல்லறையிலும் காணப்பட்டன.

பிரிட்டனின் புகையிலை இறக்குமதி

லண்டன், ஏப். 23—

சென்ற வருஷம் பிரிட்டன் ரூ. 6370,00,000 மதிப்புள்ள புகையிலையை இறக்குமதி செய்திருக்கிறது. அதற்கு இந்திய வருஷம் ரூ. 4680,00,000 மதிப்புள்ள புகையிலை இறக்குமதி செய்யப்பட்டதாம்.

இனி நடப்பவை

மங்கலநல்லூர்:—அறிஞர் நினைவு நாள். 27-4-50 வியாழன் மாலை 5 மணிக்கு இவ்வூர் கடைவீதியில் தோழர் ஆர். நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடைபெறும். தோழர் ஹனிபா அவர்கள் நாட்டுப் பண் பாடுவார். தோழர்கள் வை. மாணிக்கம், சி. பி. சிற்றரசு, எ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் மற்றும் பலரும் "அரசியலும் கடமையும்" என்பதுபற்றி பேசுவார்கள்.

* * *

கூடலூர்:—ஐக்கிய வைத்ய சங்கத்தின் ஆதரவில், 27—4—50 அன்று மாலை டவுன் ஹாலில் பொதுக் கூட்டம் நடைபெறும். அதுசமயம் தமிழ் ஜில்லாக்களிலுள்ள ரிஜிஸ்டர் ஆக வேண்டிய வைத்யர்களின் எண்ணிக்கையை சேகரிக்க ரிஜிஸ்டர் செய்ய சம்மந்தப்பட்ட காரியங்களைத் துரிதமாகச் செய்ய ஓர் கமிட்டி நியமிக்கப்படும்.

திருந்திய திருமணம்

26—4—50 புதன் மாலை 5-30 மணிக்கு, காக்ரேன் பேசின்ரோடு, மூலக்கொத்தளம் கொள்ளாபுரிநகர் நெ. 120 இல்லத்தில் தோழர் கே. ராமலிங்கம் அவர்கள் தலைமையில், தோழர் ஆர். கே. ராதாவுக்கும் தோழியர் எம். கோவிந்தம்மாளுக்கும் திருமணம் நடைபெறும். தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், தி. பா. போகேந்திரன் ஆகியோர் பேசுவர்.

Printed & Published by T. M. Parthasarathy at the mercantile Press, 2/45, MuthuMari Chetty Street, Madras-1.